**நிகழும் சுபகிருது வருடம் மாசி மாதம் 24ஆம் நாள் (08.03.2023)**
**புதன்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மாலை 4.30 மணிக்கு**
**நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2023ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 76, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2023ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண்: 77, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3 :**

நாமக்கல் மாவட்டத்தின் தலைநகரமான நாமக்கல் நகராட்சி 39 வார்டுகளை உள்ளடக்கிய சிறப்பு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. 2011ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 119491 மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். 2011ஆம் ஆண்டு நாமக்கல் நகராட்சியில் சுற்றி உள்ள 9 ஊராட்சிகள் நகராட்சியுடன் இணைக்கப்பட்டபிறகு நகரம் அதிகளவில் வளர்ச்சி அடைந்து தற்போது 55000 குடியிருப்புகளில் சராசரியாக 215000 மக்கள் தொகை வசித்து வருகின்றனர். மேலும் நகரில் பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலங்கள், மாநில அளவில் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்கள், சுற்றுலா தளங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளதின் அடிப்படையில் தினசரி சராசரியாக சுமார் 25000 பேர் நாமக்கல் நகராட்சிக்குள் வந்து செல்கின்றனர்.

| வ. எண். | உள்ளாட்சி பெயர் | மக்கள் தொகை (2023 சராசரி) | பரப்பளவு (ச.கி.மீ) | ஆண்டு வருமானம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 215000 | 55.24 | 4515.00 |

தற்போது நாமக்கல் நகராட்சியினை சுற்றி வட்ட சாலை அமைக்கப்பட்டு வருகிறது. வட்ட சாலை அமைக்கப்பட்ட பின்னர் நாமக்கல் நகராட்சி அருகில் சுற்றுவட்டச்சாலை உள்ளே அமைந்துள்ள கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பதின் மூலமாக ஒருகிணைந்த உள்ளாட்சியாக மேம்படுத்தப்படும்.

| வ. எண். | கிராம ஊராட்சி பெயர் | மக்கள் தொகை (2023 சராசரி) | பரப்பளவு (ச.கி.மீ) | ஆண்டு வருமானம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வகுரம்பட்டி | 18175 | 9.47 | 16.87 |
| 2 | வள்ளிப்புரம் | 4864 | 7.34 | 10.16 |
| 3 | ரெட்டிப்பட்டி | 22804 | 10.23 | 73.49 |
| 4 | வீசாணம் | 4055 | 5.19 | 4.89 |
| 5 | மரூர்பட்டி | 3150 | 5.43 | 4.09 |
| 6 | பாப்பிநாயக்கன்பட்டி | 5438 | 5.33 | 26.85 |
| 7 | சிலுவம்பட்டி | 3580 | 4.13 | 21.70 |
| 8 | தொட்டிப்பட்டி | 1964 | 6.58 | 1.69 |
| 9 | வசந்தபுரம் | 7869 | 8.47 | 16.61 |
| 10 | வேட்டாம்பாடி | 6983 | 6.22 | 13.71 |
| 11 | லத்துவாடி | 7324 | 13.52 | 29.18 |
| 12 | காதபள்ளி | 3855 | 8.16 | 3.21 |
| மொத்தம் | | **90061** | **90.07** | **222.45** |

மேற்கண்ட கிராம ஊராட்சிகளை நாமக்கல் நகராட்சியுடன் இணைப்பதால், கீழ்கண்டவாறு கட்டமைப்புகள் தரம் உயர்த்தப்படும்.

| வ. எண். | உள்ளாட்சி பெயர் | மக்கள் தொகை (2023 சராசரி) | பரப்பளவு (ச.கி.மீ) | ஆண்டு வருமானம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் நகராட்சி | 215000 | 55.24 | 45.15 |
| 2 | 12 கிராம ஊராட்சிகளின் மொத்தம் | 90061 | 90.07 | 2.22 |
| | **மொத்தம்** | **305061** | **145.31** | **47.37** |

மேற்கண்டவாறு நகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்வதால் அரசு மானியங்கள் அதிக அளவில் பெறப்பட்டு நகரம் மேலும் வளர்ச்சியடையும். மேலும் சுற்றியுள்ள கிராம ஊராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேம்படும் என நகர்மன்றத் தலைவர் அவர்களின் 06.03.2023ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.6, நாள்.14.02.2023 வாயிலாக நாமக்கல் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசிற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. தற்போது நகர்மன்றத் தலைவர் அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் 2023ஆம் ஆண்டைய சராசரி மக்கள் தொகை மற்றும் பரப்பளவின் அடிப்படையில் மேற்கண்ட 12 கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கான தற்போதைய பதவி காலம் முடிவடைந்தவுடன் நாமக்கல் நகராட்சியுடன் ஒன்றிணைத்து மொத்த மக்கள் தொகை 305061 மற்றும் மொத்த பரப்பளவு 145.31சதுர கி.மீ கொண்ட மாநகராட்சியாக தரம் உயர்த்த திருத்திய கருத்துரு அரசிற்கு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–**

நாமக்கல் நகராட்சியினை சுற்றியுள்ள 12 கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவி காலம் முடிவடைந்துடன், அவைகளைதரம் நாமக்கல் நகராட்சியுடன் ஒன்றிணைத்து 305061 மக்கள் தொகை மற்றும் மொத்த பரப்பளவு 145.31சதுர கி.மீ கொண்ட மாநகராட்சியாக தரம் உயர்த்த திருத்திய கருத்துரு அரசிற்கு சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க. எண்: 806/2023/சி1)**

**தீர்மானம் எண் : 78, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4 :</u>**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு, கொரோனா நோய் தடுப்பு பணிகள் DBC பணியாளர்களை கொண்டு நடைபெற்று வருகின்றது. நகர்மன்ற தீர்மானம் எண்.181, நாள்.17.08.2022 வாயிலாக 180 DBC பணியாளர்கள் வரை நோய்தடுப்பு பணிக்காக பதிவு பெற்ற சுய உதவிக்குழுக்கள் மூலமாக பணியமர்த்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.55.00இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி ஆஞ்சநேயா மகளிர் சுய உதவிக்குழு மூலமாக நாளது தேதி வரை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்கண்ட பணிக்கு 28.02.2023 வரை ரூ.48.52இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. எனவே 31.03.2023 வரை மேற்கண்ட பணியை தொடர்ந்து மேற்கொள்ள தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்ட பணிக்கான கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண். 4797/2022/எச்1)**

**தீர்மானம் எண் : 79, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் நாமக்கல் மாவட்டத்தில் வெளிவரும் வகையில் தமிழ் நாளிதழில் சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க. எண். 4015/2022/அ2)**

**தீர்மானம் எண் : 80, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6 :</u>**

நாமக்கல் நகராட்சியின் 2022–2023ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2023–2024ஆம் ஆண்டுக்கான உத்தேச மதிப்பீடு ஆகியவற்றை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>. மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 556/2023/பி1)**

**தீர்மானம் எண் : 81, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7 :</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந2) துறை 26.09.2014ஆம் தேதிய அரசாணை நிலை எண்.118இல் நாமக்கல் நகராட்சிக்கு இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட உத்தரவு வழங்கியதின் பெயரில் நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை மற்றும் திருச்சி சாலை அம்மா உணவகங்களுக்கு தேவையான அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாகவும், பால் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் மூலமாகவும், எரிவாயு சரண்யா கேஸ் நிறுவன மூலமாகவும், மளிகை பொருட்கள் சேலம் ஸ்டோர் நிறுவன மூலமாகவும் மற்றும் தினசரி காய்கறிகளை உழவர் சந்தை விலைபட்டியலின் படி திரு.ஜி.பிரபாகரன் என்பவர் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி அம்மா உணவகங்களில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் ஒரு அம்மா உணவகத்தில் 11 பணியாளர்கள் வீதம் இரண்டு அம்மா உணவகங்களில் மூலம் 22 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எனவே மேற்படி இரண்டு அம்மா உணவகங்களுக்கும் 2023–2024 நிதியாண்டிற்கான அனைத்து செலவீனங்களுக்கும் சேர்த்து உத்தேச செலவின தொகை ரூ.55,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 2022–2023ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.55,00,000/–ற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **( ந.க.எண். 2932/2015/அ1)**

**தீர்மானம் எண் : 82, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பல்வேறு திட்டநிதி மற்றும் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் இதர அறிவிப்புகளை நாளிதழ்களில் பிரசுரம் செய்ய 2023–2024ஆம் நிதியாண்டிற்கு தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க. எண். 6060 /2021/இ1)**

**தீர்மானம் எண். : 83, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளில் 2022–2023ஆம் நிதியாண்டில் தொழில்வரி இனங்களில் இடம் மாற்றம் செய்யப்பட்ட அரசு அலுவலகங்கள், தனியார் வணிக நிறுவனங்கள், அந்நிறுவனங்கள் செயல்பட்டு வந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்டும் மற்றும் தொழில் நடத்தி வந்த தொழில் உரிமையாளர்கள் அக்கடைகள் தற்போது இடம் மாற்றம் செய்யப்பட்டும், வணிக பயன்பாட்டில் உள்ளதை குடியிருப்பாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தொழில் வரி கேட்பில் 2022–2023ஆம் நிதியாண்டு வரை தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு தொழில் வரி தலைப்பில் வசூலிக்கப்பட முடியாத தொழில்வரி விதிப்புகளில் நிலுவை இருந்ததை தொடர்ந்து 39 வார்டுகளுக்கான வருவாய் உதவியாளர்களால் நேரடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தொழில்வரி சேர்த்தல், நீக்கல் விபரங்கள் அடங்கிய விபர பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் அப்பட்டியலில் உள்ள நீக்கம் செய்யப்பட வேண்டிய தொழில்வரி விதிப்பு இனங்களை கள ஆய்வு செய்ய இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு குழு அமைக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டதில் மேற்கண்ட குழுவின் அறிக்கையில் வருவாய் உதவியாளர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்களால் வழங்கப்பட்ட தொழில்வரிக்கான பட்டியலில் ஏற்கனவே இயங்கி வந்த வணிக நிறுவனங்கள், கடைகள் மூடப்பட்டு விட்டதாலும் அவர்கள் மேற்கொண்டு வந்த வணிகம் நிறுத்தப்பட்ட நிலையில் அந்த இடத்தில் தற்போது புதியதாக ஆரம்பிக்கப்பட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் கடை உரிமதாரர்களுக்கு புதியதாக தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டும் 2715 எண்ணிக்கையிலான கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், தொழில் வரிவிதிப்பாளர் பழைய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு தற்போது உள்ள வார்டில் அவரது பெயரில் புதிய தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டு நடப்பு ஆண்டு வரை வரி செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால் பழைய வரி விதிப்பு அந்த வார்டில் தொடர்ந்து வரப்பெற்ற வரிவிதிப்புகளும், ஒரே வரி விதிப்புதாரருக்கு இருமுறை கேட்பு எழுப்பப்பட்டுள்ளதால் அவ்வரிவிதிப்பையும் மற்றும் தொழில்வரிவிதிப்பு செய்யப்பட்ட இடத்தில் தற்போது காலியிடமாக உள்ளது, கடைகள் செயல்பட்டு வந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்டு உள்ளதாலும் அவ்வரிவிதிப்பில் உள்ள நிலுவை மற்றும் நடப்புத் தொகையும், நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

புதியதாக வரப்பெற்ற வணிக நிறுவனம் மற்றும் கடைகளுக்கு புதிய தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டு கேட்பு எழுப்பப்பட்டுள்ளதால் பழைய வரிவிதிப்புதாரர்களின் பெயரில் இருந்த வணிக நிறுவனங்களுக்கான கேட்பு ரத்து செய்யப்படாமல் தொடர்ந்து கணினியில் கேட்பு எழுப்பப்பட்டு வருவதாக ஆய்வு குழு உறுப்பினர்களால் மூலம் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பழைய வரிவிதிப்புகளின் நடப்பு கேட்பினை 2022–2023 முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்கான கேட்பு தொகை ரூ.7,38,288/– கணினியில் நீக்கம் செய்யவும் மற்றும் இருமுறை, மூன்றுமுறை வரிவிதிப்பு மற்றும் வேறு ஒரு இடத்திற்கு மாற்றம், கடை செயல்பாட்டில் இல்லாமல் காலியாக உள்ளது மற்றும் கடைகள் செயல்பட்டு வந்த கட்டிடம் இடிக்கப்பட்டு காலியடமாக உள்ளது மற்றும் பேருந்து நிலையம் எதிர்புறம் செயல்பட்டு வந்த தினசரி சந்தையில் இருந்த கடைகள் என தொழில்வரி விதிப்புகளின் நிலுவையில் உள்ள தொகை ரூ.5,22,306/– மற்றும் நடப்பில் உள்ள தொகை ரூ.1,14,394 /– கேட்பில் இருந்து நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேலும், நகராட்சியில் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்து நீண்ட வருடங்களாக பணி ஏதும் எடுக்காமல் ஒப்பந்ததாரர்கள் தனது உரிமத்தை புதுப்பிக்கப்படாமல் உள்ளதால் வரிவதிப்புகளில் உள்ள நிலுவை ரூ.1,78,250/– மற்றும் நடப்பில் ரூ.25,000/– தொகை கேட்பில் இருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும். ஆக மொத்தம் 15,78,238/– ஐ நீக்கம் நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

அரசு அலுவலகம் மற்றும் தனியார் நிறுவனங்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டதால் Organisation தலைப்பு கேட்பில் உள்ள 39 வரி விதிப்புகளின் நிலுவை தொகை ரூ.10,50,124/–மற்றும் நடப்பு தொகை ரூ.2,11,094/– தொகை என மொத்தம் ரூ.12,61,218/–ஐ கணினியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்:4963/2018/அ1)**

**தீர்மானம் எண். : 84, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**